Literacy for a Billion

Movie: Kodaikkanal
Year: 2008

Song: Mettu Mettu
Lyricist:

மெட்டு மெட்டு
மெட்டு கட்டி பாடு
காதோடு தாளத்தோடு
இங்கு கொஞ்சி கொஞ்சி
கொஞ்சி பேசும் காடு
பூங்கூடு என் வீடு
இது ரவிவர்மன்
காணாத காட்சி
இங்கு எல்லாமே
இயற்கையின் ஆட்சி
உயிருள்ளே குடிபுகுந்தேன்
புதுபிறவி நானடைந்தேன்
மெட்டு மெட்டு
மெட்டு கட்டி பாடு
காதோடு தாளத்தோடு

கார்மேக வானம் வந்து
கையை தொட்டு நாள் பார்க்கும்
பூமுத்தம் மெல்ல தந்து
பெண்ணைத்தானே பூஜிக்கும்
மலையருவி மனமுருகி
தினம் என்னை தாலாட்டுதே
நான் சந்தையில்
தோகையில் மயிலா
இல்லை சின்னக்குயில்
பாடும் மொழியா
என்னென்னவோ
நான் சொல்லவோ
நெஞ்சை கொல் கொல்லும்
சொர்க்க லோகமோ
மெட்டு மெட்டு

மெட்டு கட்டி பாடு
காதோடு தாளத்தோடு
இங்கு கொஞ்சி கொஞ்சி
கொஞ்சி பேசும் காடு
பூங்கூடு என் வீடு

தத்தித்தான் தாவி தாவி
ஆட்டம் போடும் தேன் சிட்டு
என்னோட அழகை கண்டு
வாயை பொத்தி கைகட்டு
சிறுமுயலே புல்வெளியை
எனக்கொரு மெத்தையாக்கு
ஏ பட்டாம்பூச்சி
றெக்கையை நீ தா
ஒரு கண்ணாமூச்சி
ஆட நீ வா வா
வெட்டுக்கிளி வாகனமே
நான் விண்வெளியை
தாண்டி பறப்பேன்
மெட்டு மெட்டு
மெட்டு கட்டி பாடு
காதோடு தாளத்தோடு
இங்கு கொஞ்சி கொஞ்சி
கொஞ்சி பேசும் காடு
பூங்கூடு என் வீடு
இது ரவிவர்மன்
காணாத காட்சி
இங்கு எல்லாமே
இயற்கையின் ஆட்சி
உயிருள்ளே குடிபுகுந்தேன்
புதுபிறவி நானடைந்தேன்

harshDisclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.

PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.